**டிசம்பர் -2**

**இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு ஞானஸ்னானம் பெற்று, உன் பாவங்கள் போகக்கழுவப்பட்டு என்றான். -அப் 22:16.**

இங்கு சொல்லப்பட்டதில் ஒரு வழிகாட்டுதல் இருக்கிறது. மற்றவர்கள்மேல் செல்வாக்கை உடையவர்களும், அவர்களை நல்ல வழியிலே கொண்டுவர நாடிக்கொண்டிருக்கிற எல்லோரும் இதை அப்படியே பின்பற்ற தகுதியாயிருக்கிறது. அவர்கள் முழுதுமாக கீழ்ப்படியவும், கர்த்தரையும் சத்தியத்தையும், பூரணமாக அறிக்கையிடவும், அவர்கள் தங்களை தாமதப்படுத்தாதிருக்க அவர்களைத் துரிதப்படுத்துங்கள். தங்களுடைய விசுவாச கண்கள் கர்த்தரை கண்டுகொண்ட பிறகும், தங்களுடைய காதுகள் அவருடைய சத்தத்தைக் கேட்டபிறகும், உடனடியாகக் கீழ்ப்படிய விருப்பமில்லாதவர்களாகயிருந்தால், கொஞ்சக்காலத்திற்குப்பிறகு, கீழ்ப்படிய அவர்கள் மிகவும் குறைவான விருப்பத்தையே உடையவர்களாய் இருப்பார்கள். அப்பொழுது உலகமும், மாம்சமும், பிசாசும் அவர்களிடம் நீ ஒரு தீவிரவாதியாக இராதே! மிதமாக இரு. உன்னைத்தானே நீ முற்றிலுமாக கர்த்தருக்கு பிரதிஷ்டை செய்யாதே. உன்னுடைய பிறரும் சிநேகிதரும் உன்னை அறிவிழந்தவன் என்று நினைப்பார்கள். இது உன்னுடைய நம்பிக்கையிலும், எதிர்காலப்பலனிலும், தலையிடும் உன்னுடைய சிநேகிதர்களை விரோதிகளாக மாற்றும். இது மிகவும் அதிகமான நஷ்ட்டத்தை உனக்கு உண்டுபண்ணும். மெதுவாகச்செல் என்று சொல்லுவார்கள். -
**Z 01,186 (R 2823)**

நம்முடைய மூலவாக்கியத்தின்படி தரிசுப்பட்டணத்தானாகிய சவுல் தன்னுடைய சமய சந்தர்ப்பங்களும், அனுபவங்களும், நிலைமையும் உறுதிப்படுத்தின செயல்களில் ஈடுபடுவதற்கு முன்பு, கர்த்தருடைய தூதனால் அப்படிச் செய்ய உற்சாகப்படுத்தப்படும் வரைக்கும், காத்திருந்ததாகத் தோன்றுகிறது. இந்த விஷயத்தில் அவன் நமக்கு ஒரு உதாரணமாக இருக்கிறான். நம்முடைய சமய சந்தர்ப்பங்களும், அனுபவங்களும், நிலைமையும் முன்னேற நம்மைத் தூண்டினாலும், கர்த்தருடைய வார்த்தை அதன் தத்துவங்களின் மூலமாயும், ஆவியின் மூலமாயும், பராமரிப்பின் மூலமாயும் தூண்டப்படுகிற போக்கிலே நாம் செல்ல ஒத்துக்கொள்ளும் வரைக்கும், தரித்து நின்று கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால், சவுலைப்போல, கர்த்தருடைய வார்த்தை நம்மை முன்னேற உத்தரவு இட்டபிறகு முன்செல்ல தயங்காமலிருப்போமாக. முன்னேறி செல்ல நமக்கு அவர் உத்தரவு இடும்வரை முன்னேறி செல்ல தூண்டுகிற தவறான அவசரத்தை வெற்றிகரமாகத் தடுத்தாலும், ஜெயமடைந்தவர்களாகக் கர்த்தருக்குக் காத்திருந்தாலும், பிறகு உடனடியாகக் கீழ்ப்படிதலும், குண அபிவிருத்தி அடைந்திருப்பதின் ஒரு மகிமையான அளவாயிருக்கிறது. ஒருவேளை விஷேசமாக கர்த்தருடைய ஜனங்களின் மத்தியில் நாம் தலைவர்களாக இருந்தோமானால் கிறிஸ்தவ குணத்தின் வேறு எந்த விஷயத்திலும்விட இதில் மிகவும் அடிக்கடி நாம் சோதிக்கப்படுகிறோம். **-P 26, 172.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

**யாத் 22:29; மத் 8:21,22; 19:16-22; லூக் 9:61,62; அப் 24:25; யோசு 24:15; 1ராஜா 18:21; ஏசா 50:7; 1கொரி 15:58; 2பேது 1:10.**

**கோபுர வாசிப்பு : z `14, 248 (R 5520).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் உடனடியாகக் கீழ்ப்படிகிறவனாயிருந்தேனா? ஏன்? பலன்கள் எவை?**